[13th March 1961

Sri A. A. RASHEED : May I know what is the compensation that the All-India Radio has proposed to give for the lands?

The Hon. Sri C. SUBRAMANIAM : The usual compensation according to the Land Acquisition Act in respect of private property.

Chemical factories

* 792 *Q.*—Sri **A. VEDARATHNAM :** கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் இம் மாநிலத்தில் எத்தனை ரசாயனத் தொழிற் சாலைகள், எங்கெங்கே இருக்கின்றன?

(இ) இவற்றின் மூலம் என்னென்ன ரசாயனப் பொருட் கள் உற்பத்தியாகின்றன?

The Hon. Sri R. VENKATARAMAN : (அ) & (இ) There is no chemical factory in the public sector. Thirty licences have been granted by Government of India under the Industries (Development and Regulation) Act, 1951, for setting up factories in the private sector for the manufacture of various chemicals. Details about these factories are not available as they are in the private sector.

Sri **A. VEDARATHNAM :** நம்முடைய நாட்டிலே ஏராள மான ரசாயன உரப் பொருள்கள் தேவையாக இருக்கின்றனவே, அப்படியிருந்தும் இந்தத் தொழிற்சாலைகளை நடத்தவேண்டு மென்று அரசாங்கம் கருதவில்லையா?

The Hon. Sri **R. VENKATARAMAN :** இப்பொழுது 30 லைசென்சுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது நிறைவேற்றப் பட்டால், சர்க்கார் நடத்தவேண்டிய அவசியம் இருந்தால் நடத்தும்.

Provident Fund (Misappropriation)

* 793 *Q.*—Sri **S. M. ANNAMALAI :** கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், வந்தவாசி வட்டம், அனுகி மங்கலம் பஞ்சாயத்துப் பள்ளி ஆசிரியருடைய பிராவிடண்டு நிதி பணத்தை மாவட்ட ஆட்சி மன்றத்தில் கையாடியதாக சென்ற 1960-ம் ஆண்டு மார்ச்சுமீ 14வல் வேலூர் வடக்கு போலீஸார் விசாரணை செய்தது எந்த நிலையில் உள்ளது?

(இ) எவ்வளவு பணம் யாரால் எப்படிக் கையாளப்பட்டது?

The Hon. Srimathi **LOURDHAMMAL SIMON :** (அ) & (இ) **The matter is still under investigation by the Police.**

13th March 1961]

SRI S. M. ANNAMALAI : சர்க்கார் பணத்தைக் கையாடிய தாக இப்பொழுது புகார் வந்திருக்கின்றனவே அப்படியானல் ஏன் அவர்களை சஸ்பெண்ட் செய்யக்கூடாது ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : யாரை சஸ்பெண்ட் செய்வது, இதற்கு தகுந்த காரணம் என்ன என்று சொல்வதற்கில்லை. The matter is under Police investigation.

MR. SPEAKER: கனம் மந்திரி அவர்கள் இப்பொழுது பதில் சொல்வது சரி அல்ல. இது இன்வெஸ்டிகேஷனில் இருக்கும் போது அதைப்பற்றி கேட்பதும் சரி அல்ல. This will prejudice the investigation.

Selection posts (P.W.D.)

* 794 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) the number of officers selected for the selection posts in the Public Works Department every year for the last five years and the posts to which they were selected;

(b) the principle followed in the selection and the body which selects them; and

(c) how far their academic qualifications and rank in examinations are taken into consideration in the matter of selection?

THE HON. SRI P. KAKKAN : (a) to (c) The particulars [a] are placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : இப்பொழுது சூபரின்டன்ட்டிங் என்ஜினீயரை தேர்ந்தெடுத்ததில், நேரடியாக அசிஸ்டன்ட் என்ஜினீயராக நியமிக்கப்பட்டு அந்த தேதியில் இருந்து சர்விசைக் கணக்கிட்டுப்பார்த்து ஒரு ஹரிஜன் மாத்திரம் எக்ஸிகூடிவ் என்ஜினியராக நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து கணக்கு எடுத்தது உண்மையா ? அப்படியாயின் அதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI P. KAKKAN : எக்ஸிகூடிவ் என்ஜினீயர் ஆன பிறகுதான் சூபரின்டன்டிங் என்ஜினீயராக முடியும். எக்ஸ்கூடிவ் என்ஜினீயருக்கு மேல்தான் சூபரின்டன்டிங் என்ஜினீயர்.

SRI V. K. KOTHANDARAMAN: மற்றவர்கள் விஷயம் போல் அல்லாமல் இது மாத்திரம் ஏன் இப்படி செய்யப்பட்டது ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினருக்கு நான் சொல்லவிரும்புவது நான் வந்த பிறகு எந்தவிதமான முடிவும் ஏற்படவில்லை என்று.

---

[a] Printed as Appendix VI on pages 334–335 infra.

LEGISLATIVE ASSEMBLY